27 12 2024 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கின் இறுதிச்சடங்குகள் தில்லியில் நாளை காலை அரசு மரியாதையுடன் நடைபெறுகிறது.

2. பொருளாதார சிக்கலில் இருந்த தேசத்தை புதிய பொருளாதார பாதைக்கு அழைத்துச் சென்றவர் மன்மோகன்சிங் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

3. அமெரிக்கா உடனான நல்லுறவுகளை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருடன், மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

4. நாட்டின் கலாச்சார மற்றும் கடல்சார் பாரம்பரியத்தை மேம்படுத்தும் வகையில் கலங்கரை விளக்கங்கள் சுற்றுலா ஊக்குவிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. உலக **Rapid** மற்றும் **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, நான்கு புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கின் இறுதிச்சடங்குகள் தில்லியில் நாளை காலை அரசு மரியாதையுடன் நடைபெறுகிறது.

தில்லியில் உள்ள மன்மோகன்சிங் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது உடலுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு. குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள இரங்கல் செய்தியில், சிறந்த பொருளாதார நிபுணரான மன்மோகன்சிங், பொருளாதார சிக்கலில் இருந்த தேசத்தை புதிய பொருளாதார பாதைக்கு அழைத்துச்சென்ற பெருமைக்குரியவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மன்மோகன்சிங் உடல் அவரது இல்லத்திலிருந்து நாளை காலை காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது.

இதைத்தொடர்ந்து, இறுதி ஊர்வலம் புறப்பட்டு தகனம் செய்யப்படும் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு கே சி வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

அமெரிக்கா சென்றுள்ள மத்திய அமைச்சர் திரு ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஆன்டனி பிளிங்கனை சந்தித்து பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இருநாடுகளுக்கும் இடையேயான நல்லுறவில் கடந்த நான்காண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அப்போது ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா உடனனான நல்லுறவுகள் இருநாடுகளுக்கும் பயன் அளிப்பதோடு, உலக நாடுகளுக்கும் பலன் அளிக்கக்கூடிய வகையில் தொடரும் என்று திரு ஜெய்சங்கர் அதில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் நியூயார்க், சிகாகோ உள்ளிட்ட துணைத்தூதரகங்களின் அதிகாரிகளை அவர் சந்தித்து பேசினார்.

அப்போது, அமெரிக்கா உடனான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அந்நாட்டுடன் தொழில்நுட்பம், வர்த்தகம், முதலீடுகளில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் விவாதித்ததாக மற்றொரு சமூக வலைதள பதிவில் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழும் இந்திய சமூகத்தினருக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கான ஆலோசனைகளையும் அப்போது தாம் பகிர்ந்துகொண்டதாக திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>**

**Suzuki** மோட்டார் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் **Osamu Suzuki** மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், ஆட்டோ மொபைல் துறையில் உலக அளவில் மிகச்சிறந்த தொழில் அதிபராக திகழ்ந்தவர் என்றும், அவருடைய எதிர்காலத்தை நோக்கிய போக்குவரத்துத் திறன் தொடர்பான பார்வை நினைவுகூரத்தக்கது என்றும் கூறியுள்ளார்.

அவருடைய தலைமையில் **Suzuki** மோட்டார் நிறுவனம் உலக அளவில் சக்திவாய்ந்த நிறுவனமாகவும், சவால்களை எதிர்கொண்டு புதுமை கண்டுபிடிப்பு மற்றும் விரிவாக்கம் அடைந்து வெற்றியடைந்ததாகவும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மாருதி நிறுவனத்துடன் இணைந்து இந்திய ஆட்டோ மொபைல் சந்தையில் புரட்சிகர மாற்றத்தை உருவாக்கியவர் **Osamu Suzuki** என்றும் திரு நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

இந்திய தர கவுன்சிலின் அங்கமான சோதனை மற்றும் அளவு திருத்த ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் தலைவராக டாக்டர் சந்தீப் ஷா நியமிக்கப்பட்டுள்ளார்.

சோதனை மற்றும் அளவு திருத்த சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது.

நுகர்வோர், வணிகர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் பயன்படுத்தும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளில் நம்பிக்கையை உறுதி செய்யும் பணியையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், புகழ் பெற்ற மருத்துவ நிபுணரான டாக்டர் சந்தீப் ஷா, அந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் கடல்சார் பாரம்பரியத்தை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு கலங்கரை விளக்கங்கள் சுற்றுலாவை ஊக்குவித்து வருகிறது.

கலங்கரை விளக்கங்கள் சுற்றுலா என்பது நாட்டின் 7 ஆயிரத்து 500 கிலோமீட்டர் நீளம் உள்ள கடற்கரைகளில் அமைந்துள்ள 204 கலங்கரை விளக்கங்களையும், அதனை சுற்றியுள்ள பகுதிகளையும், சிறந்த சுற்றுலா தலங்களாக அமைப்பதாகும் என்று மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

அமிர்த காலத்தில் நாட்டின் மேம்பாட்டிற்காக தொலைநோக்கு பார்வையின் ஒரு பகுதியாக கலங்கரை விளக்க சுற்றுலாவுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மையங்களான கலங்கரை விளக்கங்கள், உள்ளூர் கைவினைப்பொருட்கள், பாரம்பரிய உணவு வகைகள், மரபுகளை எடுத்துக்காட்டும் சுற்றுலாத் தலங்களாகவும் செயல்படுவதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

<<<<<<>>>>>

இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் துணைத்தூதரகங்கள் மூலம் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 10 லட்சத்திற்கும் மேற்பட்ட விசாக்கள் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா, வர்த்தகம், கல்வி, மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவில் இருந்து அதிக அளவில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொள்பவர்களுக்காக இந்த விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

கோவிட் பெருந்தொற்றுக்கு பின்னர் அமெரிக்காவிற்கு செல்லும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் இந்தியாவில் இருந்து அமெரிக்காவிற்கு பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு அதிகரித்திருப்பதாகவும், நடப்பாண்டில் மட்டும் அமெரிக்காவுக்கு சென்ற இந்தியர்கள் எண்ணிக்கை 26 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும் அமெரிக்க தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலம் **'Bhatinda '** என்ற இடத்தில் பேருந்து கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் எட்டு பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர்.

**'Talwandi Sabo** என்ற இடத்தில் இருந்து **'Bhatinda '** நோக்கி சென்ற பேருந்து பாலத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டதாக காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து பகுதியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினரும், காவல்துறையினரும் உடனடியாக சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

<<<<<<>>>>>

தென்கொரியாவின் தற்காலிக அதிபர் திரு **'Han Duck – Soo**-வுக்கு எதிராக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பதவிநீக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதிபர் பதவியில் இருந்த திரு **Yoon Suk Yeo,** சர்ச்சைக்குரிய ராணுவ சட்டத்தை கொண்டுவந்ததால், பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதையடுத்து, தற்காலிக அதிபராக பதவியேற்ற திரு **Han Duck – Soo**-வுக்கு எதிராக, இரண்டு வாரங்களுக்கு நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

அனைத்து 192 உறுப்பினர்களும் பதவிநீக்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தென்கொரிய வரலாற்றில் தற்காலிக அதிபர் ஒருவர் முதல் முறையாக நாடாளுமன்ற தீர்மானம் மூலம் நீக்கப்பட்டுள்ளார்.

இதைத்தொடர்ந்து துணை பிரதமராக இருந்த திரு **Choi Sang – Mok** தற்காலிக அதிபர் மற்றும் தற்காலிக பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

<<<<<<>>>>>

புத்தாண்டு தினத்தன்று 50 நிமிட நேரம் பட்டாசுகளை வெடித்து உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற அபுதாபி திட்டமிட்டுள்ளது.

ஜனவரி ஒன்றாம் தேதி **Sheikh Zayed '** திருவிழாவாக தொழில்நுட்பம் மூலம் பட்டாசுகளை வெடிக்க செய்யவும், அதனை ஆயிரக்கணக்கான ட்ரோன்கள் மூலம் படம் பிடிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்மூலம், ஏற்கனவே பாரம்பரிய பட்டாசுகளை வெடிக்கச் செய்து பெறப்பட்ட ஆறு கின்னஸ் உலக சாதனைகளை முறியடிக்கவும் அபுதாபி நிர்வாகம் முடிவு செய்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

இரவுநேர வான்வெளியில் இந்த காட்சிகளை ஒளிபரப்பவும் அபுதாபி திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

லாவோஸ் நாட்டில் இந்தாண்டு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை தாண்டியிருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. தலைநகர் **Vientiane** அதிகபட்சமாக பாதிப்பு எண்ணிக்கை ஐந்தாயிரத்து 761-ஆக பதிவாகியுள்ளது. டெங்கு பாதிக்கப்பட்டு இதுவரை 11 பேர் உயிரிழந்திருப்பதாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக **Rapid** மற்றும் **Blitz** செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி ஐந்து சுற்று ஆட்டங்களில் நான்கில் வெற்றிபெற்றார். ஒன்றில் தோல்வியடைந்தார்.

நியூயார்க்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், நான்கு புள்ளிகளுடன் அவர் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

மகளிர் பிரிவில் **Harika** மூன்றரை புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

------------

வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. வதோதராவில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த வெஸ்ட் இன்டீஸ், தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 38 புள்ளி ஐந்து ஓவரில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது. தீப்தி சர்மா 6 விக்கெட்டுகளையும், ரேணுகா சிங் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். 163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 28 புள்ளி இரண்டு ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 167 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

----------

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது. மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 164 ரன் எடுத்துள்ளது.

<<<<<<END>>>>>